# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2125 - 2019 මැයි මස 24 වැනි සිකුරාදා - 2019.05.24**

*2125 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1016 | வரவு செலவுக் கூற்றுகள் | – |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | – | வரவு செலவுத் திரட்டுகள் | – |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1023 | ஆதன விற்பனைகள் | – |
| துணைவிதிகள் | – | ஆயவிற்பனையும் குத்தகையும் | – |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | – | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | – |
| | | நானாவித அறிவித்தல்கள் | – |


***கவனிக்க.***– மாகாண சபைகள் (திருத்தம்) சட்டமூலம் 2019, மே மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மே 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,

கொழும்பு 8,

2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1015- 81526 - 5403(2019/05)

# பதவிகள் - வெற்றிடம்

## தவலம பிரதேச சபை

தென் மாகாண அரசாங்க சேவை பதவி வெற்றிடம்

*தவலம பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்காக இந்த அறிவிப்பில் உரிய தகுதிகள் பூர்த்தி செய்திருக்கும் தென் மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளரிடம் ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**அட்டவணை**

*01* **நூல் நிலைய உதவியாளர் III தரம் - பதவி வெற்றிட எண்ணிக்கை - 01**

*தென் மாகாண கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப மட்டம் தேர்ச்சி பெறாத பதவிக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை மற்றும் தென் மாகாண கௌரவ ஆளுநரின் இலக்கம் G/SP/1/1 மற்றும் 2019.03.26 ஆந் திகதிய கடிதத்தின் படி*

*சம்பள அளவு* - PL 1 - 2016A - *ரூபா* 24,250.00 - 10 x 250 - 10 x 270 - 10 x 300 - 12x330 - *ரூபா* 36,410.00

*(அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 3/2016 இல் அட்டவணை II இன் படி 2019.01.01 ஆந் திகதிக்கு ஆரம்ப சம்பளம் ரூபா 21,746.00) நான்காவது சம்பளப் படி நிலைக்கு முன்னர் வினைத்திறன் காண் தடை)*

**வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு** :

*க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரண்டு முறைக்கு மேற்படாமல் இரண்டிற்கு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்; (இதில் ஐந்து விடயங்கள் ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல்)*

*மற்றும்*

*தேசிய நூல்நிலைய சேவை சபையின் நூல் நிலைய மற்றும் தகவல் அறிவியல் டிப்ளோமா பாடநெறி பயின்றிருத்தல் மற்றும் உயர் கல்வி தகுதி பெற்றவர்களுக்கு விஷேட கவனம் செலுத்தப்படும்.*

**தொழில் தகைமை :**
*குறைந்த பட்சம் உரிய தொழிலில் ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)*

*ஆட்சேர்க்கும் முறையானது : நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.*

*திறந்த ஆட்சேர்ப்பு : (வரையறுக்கப்பட்ட விண்ணப்பதாரரின் வெற்றிடம் நிரப்புவதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் திறந்த விண்ணப்பதாரரின் வெற்றிடம் நிரப்பப்படும்.)*

**கல்வி தகைமை :**
*வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விண்ணப்பதாரருக்கு உரிய கல்வித் தகைமை திறந்த ஆட்சேர்ப்புக்கும் உரியதாகும்.*

**ஆட்சேர்க்கும் முறையானது** : *நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.*

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பின்வரும் புள்ளி வழங்கல் முறையை அடிப்படையாக கொண்டதாகும்.

| | புள்ளிகள் வழங்கும் முக்கிய துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | கல்வித் தகைமை | 30 | 50% |
| 2. | தொழில்முறை தகுதிகள் | 10 | |
| 3. | அனுபவம் | 10 | |
| 4. | பிரதேச சபை பகுதியில் வசித்தல் | 45 | |
| 5. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 5 | |
| | மொத்தப் புள்ளிகள் | 100 | |

2. **தகன இயக்குநர் III தரம் - வெற்றிட எண்ணிக்கை-01**

தென் மாகாண கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப மட்டத் தேர்ச்சி பெறாத பதவிக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை மற்றும் தென் மாகாண கௌரவ ஆளுநரின் இலக்கம் G/SP/12/8 மற்றும் 2014.09.29 ஆந் திகதியுடைய கடிதத்தின் படி

**சம்பள அளவு** : PL2 -2016A ரூபா 25,250.00-10 x 270- 10 x 300-10 x 330-12 x 350- ரூபா 38,450.00 (அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 3/2016 இல் அட்டவணை II இன் படி 2019.01.01 ஆந் திகதிக்கு ஆரம்ப சம்பளம் ரூபா 22,642.00) நான்காவது சம்பள படி நிலைக்கு முன்னர் வினைத்திறன் காண் தடை)

**வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு** :
க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் (இதில் ஐந்து விடயங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்)

மற்றும்

மூன்றாம் மற்றும் தொழில் முறைக் கல்வி ஆணைக்குழுவால் தீர்மானம் செய்த படி தேசிய தொழில் திறமையில் (NVQ) குறைந்த பட்சம் இரண்டாம் மட்ட திறன் பெற்றிருத்தல்.

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சை இல்லையென்றால் மூன்றாம் மற்றும் தொழில் முறைக்கல்வி ஆணைக்குழுவால் தீர்ப்பு செய்த படி தேசிய தொழில் திறமையில் (NVQ) குறைந்த பட்சம் மூன்றாம் மட்ட திறன் பெற்றிருத்தல்

**தொழில் தகுதி** :
குறைந்த பட்சம் உரிய தொழிலில் ஒரு வருடத்துக்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

ஆட்சேர்க்கும் முறையானது :- நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

திறந்த ஆட்சேர்ப்பு : (வரையறுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் திறந்த விண்ணப்பதாரர்களிலிருந்து வெற்றிடம் நிரப்பப்படும்.)

**கல்வித் தகைமை** :
வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விண்ணப்பதாரருக்கு உரிய கல்வித் தகைமை திறந்த ஆட்சேர்ப்புக்கு உரியதாகும்.

**ஆட்சேர்க்கும் முறை :** நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

| | புள்ளிகள் வழங்கும் முக்கிய துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | கல்வித் தகைமை | 30 | 50% |
| 2. | தொழில்முறை தகுதிகள் | 10 | |
| 3. | அனுபவம் | 10 | |
| 4. | பிரதேச சபை பகுதியில் நிரந்தமாக வசித்தல் | 45 | |
| 5. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 5 | |
| | மொத்தப் புள்ளிகள் | 100 | |

3. ***மின்சார தொழில்நுட்பவியலாளர் III தரம் - வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01***

தென் மாகாண கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப மட்டத் தேர்ச்சி பெறாத பதவிக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை மற்றும் தென் மாகாண கௌரவ ஆளுநரின் இலக்கம் G/SP/12/8 மற்றும் 2013.12.23 ஆந் திகதியுடைய கடிதத்தின் படி

**சம்பள அளவு :** PL2 -2016A ரூபா 25,250.00-10 x 270- 10 x 300-10 x 330-12 x 350- ரூபா 38,450.00

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 3/2016 இல் அட்டவணை II இன் படி 2019.01.01 ஆந் திகதிக்கு ஆரம்ப சம்பளம் ரூபா 22,642.00. நான்காவது சம்பள படி நிலைக்கு முன் வினைத்திறன் காண் தடை)

வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு :
க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு (02) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் (இதில் ஐந்து விடயங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

மற்றும்

மூன்றாம் மற்றும் தொழில் முறைக் கல்வி ஆணைக்குழுவால் தீர்மானம் செய்துள்ள படி தேசிய தொழில் திறமையில் (NVQ) குறைந்த பட்சம் இரண்டாம் மட்ட திறன் பெற்றிருத்தல்

மற்றும்

க.பொ.த. (சா.த.) பரீட்சை இல்லையென்றால் மூன்றாம் மற்றும் தொழில்முறைக்கல்வி ஆணைக்குழுவால் தீர்மானித்துள்ளபடி தேசிய மொழில் திறமையில் (NVQ) குறைந்த பட்சம் மூன்றாம் மட்ட திறன் பெற்றிருத்தல்

**தொழில் தகுதி :**

குறைந்த பட்சம் உரிய தொழிலில் ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

**ஆட்சேர்க்கும் முறையானது :** நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

திறந்த ஆட்சேர்ப்பு : ( வரையறுக்கப்பட்ட விண்ணப்பதாரரின் வெற்றிடம் நிரப்புவதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் திறந்த விண்ணப்பதாரரின் வெற்றிடம் நிரப்பப்படும்.)

**கல்வித் தகைமை :**
வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விண்ணப்பதாரருக்கு உரிய கல்வித் தகைமை திறந்த ஆட்சேர்ப்புக்கும் பொருந்தும்.

**ஆட்சேர்க்கும் முறையானது** : நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

| | புள்ளிகள் வழங்கும் முக்கிய துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | கல்வித் தகைமை | 30 | 50% |
| 2. | தொழில்முறை தகுதிகள் | 10 | |
| 3. | அனுபவம் | 10 | |
| 4. | பிரதேச சபை பகுதியில் நிரந்தரமாக வசித்தல் | 45 | |
| 5. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 5 | |
| | மொத்தப் புள்ளிகள் | 100 | |

4. **வேலை/கள தொழிலாளர் III தரம் - வெற்றிடங்களின் எண்ணிக்கை -04**
**(வேலை/கள தொழிலாளர் பதவிக்கு தகன தொழிலாளர், ஆயுர்வேத தொழிலாளர், களஞ்சிய தொழிலாளர், நீர்ச்-குழாய் தொழிலாளர், வீதித் தொழிலாளர், மின்சார தொழிலாளர், பிணம் அடக்கும் இடத்தின் தொழிலாளர் பதவிகள் உள்ளடங்கும்.)**

தென் மாகாண கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப மட்டத் தேர்ச்சி பெறாத பதவிக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை மற்றும் தென் மாகாண கௌரவ ஆளுநரின் இலக்கம் G/SP/1/1 மற்றும் 2019.03.26 ஆந் திகதியுடைய கடிதத்தின் படி

**சம்பள அளவு** : PL1 -2016A ரூபா 24,250.00-10 x 250-10 x 270- 10 x 300-12 x 330- ரூபா 36,410.00

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 3/2016 இல் அட்டவணை II இன் படி 2019.01.01 ஆந் திகதிக்கு ஆரம்ப சம்பளம் ரூபா 21,746.00. நான்காவது சம்பள படி நிலைக்கு முன்னர் வினைத்திறன் காண் தடை)

**கல்வித் தகைமை** : 8 ஆம் வகுப்பு (9 ஆவது தரம்) சித்தியடைந்திருத்தல்

**தொழில் தகுதி/அனுபவம்** : பொருத்தமற்றது.

**ஆட்சேர்க்கும் முறையானது** : நேர்முக பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

| | புள்ளிகள் வழங்கும் முக்கிய துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி தாபனத்தில் அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்திருக்கும் சேவைக்காலம் | 30 | 50% |
| 2. | கல்வித் தகைமை மற்றும் பதவிக்குரிய பெற்றுக் கொண்ட அனுபவம் தொடர்பான வேறு சான்றிதழ் | 15 | |
| 3. | பிரதேச சபை பகுதியில் நிரந்தமாக வசித்தல் | 45 | |
| 4. | ஆளுமை | 05 | |
| 5. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 | |
| | மொத்தப் புள்ளிகள் | 100 | |

5. **சுகாதார தொழிலாளர் III தரம் - வெற்றிடங்களின் எண்ணிக்கை - -01**

தென் மாகாண கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப மட்டத் தேர்ச்சி பெறாத பதவிக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை மற்றும் தென் மாகாண கௌரவ ஆளுநரின் இலக்கம் G/SP/12/08 மற்றும் 2014.01.03 ஆந் திகதியுடைய கடிதத்தின் படி

**சம்பள அளவு** : PL1 -2016A ரூபா 24,250.00-10 x 250-10 x 270- 10 x 300-10 x 330-12 x 350- ரூபா 36,410.00

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 3/2016 இல் அட்டவணை II இன் படி 2019.01.01 ஆந் திகதிக்கு ஆரம்ப சம்பளம் ரூபா 21,746.00. நான்காவது சம்பள நிலைக்கு முன்னர் வினைத்திறன் காண் தடை)

**கல்வி தகைமை** : 8 ஆம் வகுப்பு (9 ஆவது தரம்) சித்தியடைந்திருத்தல்

**தொழில் தகுதி/ அனுபவம்** : பொருத்தமற்றது.

**ஆட்சேர்க்கும் முறையானது** : நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

| | புள்ளிகள் வழங்கும் முக்கிய துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி தாபனத்தில் அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்திருக்கும் சேவைக்காலம் | 30 | 50% |
| 2. | கல்வித் தகைமை மற்றும் பதவிக்குரிய பெற்றுக் கொண்ட அனுபவம் தொடர்பான வேறு சான்றிதழ் | 15 | |
| 3. | பிரதேச சபை பகுதியில் நிரந்தமாக வசித்தல் | 45 | |
| 4. | ஆளுமை | 05 | |
| 5. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 | |
| | மொத்தப் புள்ளிகள் | 100 | |

**ஆட்சேர்ப்புக்கான நிபந்தனை :**

(i) விண்ணப்பதாரர் பரம்பரையாக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முன் 03 வருட காலத்திற்குள் தென் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.
(iii) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் நிரந்தர சேவையில் கடைமை புரியும் விண்ணப்பதாரருக்கு உச்ச வயதெல்லை பற்றி கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது)
(iv) விண்ணப்பதாரர் நன்னடத்தையுடையவராகவும் சிறந்த உடல் நலம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
(v) விண்ணப்பதாரர்கள் உரிய பதவிக்கு முன் குறிப்பிட்டு இருக்கும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(vi) எந்த ஒரு விண்ணப்பதாரரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட மாத்திரம் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது நடைமுறை சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் விண்ணப்பதாரர் ஆட்சேர்ப்புக்கு தகுதியுடையவர் என கவனத்தில் கொள்ளக் கூடாது.

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானவை. ஓய்வூதியம் உள்ளது.
(ii) உரியவாறு விதவைகள் அநாதைகள் ஓவ்வூதிய நிதியத்திற்கு உதவு தொகை செலுத்த வேண்டும்.
(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(iv) தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் இருக்கும் பதவியை நிரந்தரம் செய்த ஊழியர்களுக்கு (01) வருட வேலை பார்க்கும் காலத்தின் கீழ் (வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பின் போது)

(v) இதற்கு மேலதிகமாக தாபன ஒழுங்கு விதிகளுக்கு நிதிப் பிரமாணம் மற்றும் தென் மாகாண சபை, அரசாங்க சேவை ஆணைக்குழு ஆகியவற்றினால் அவ்வவ்போது விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் அமைந்து செயற்படுவதற்கு சகல சேவையாளரும் உட்பட்டவர்களாவார்.

**விண்ணப்பப்பத்திரம் விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

(i) இவ் அறிவித்தலின் முடிவில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி (A4) அளவுடைய கடதாசியில் தனிப் பக்கத்தில் விண்ணப்பப்பத்திரத்தை தயார் செய்து அனுப்பப்பட வேண்டும்.

(ii) விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பும் உறையில் மேல் இடது பக்கத்தில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2019.06.14 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், தவலம பிரதேச சபை, படஹேன, தவலம எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

(iii) தற்போது அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர் தமது தாபனத் தலைவர் மூலம் விண்ணப்பப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

(iv) தபாலில் கிடைக்கும் கடிதம் அல்லது பிழையாக விலாசம் எழுதப்பட்டதன் பின் திருப்பி அனுப்பப்படும் விண்ணப்பப்பத்திரம் தொடர்பாக பொறுப்பு எடுக்கப்பட மாட்டாது. குறிப்பிட்ட திகதிக்கு பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பத்திரம் இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவுரைகளுக்கு முரண்பாடான அல்லது முழுமையற்ற விண்ணப்பப்பத்திரம் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(v) ஒரு விண்ணப்பதாரர் ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பப்பத்திரம் சமர்ப்பிக்கப்படுவதாயின் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பப்பத்திரம் தயார் செய்து வெவ்வேறான உறைகளில் இட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) விண்ணப்பப்பத்திரத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது அந்த சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தயாராக இருக்க வேண்டும்.

(i) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) தொழில் சம்பந்தமான சான்றிதழ்;
(iv) அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்;
(v) தேசிய ஆளடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப் பத்திரத்தின் பிரதி (இரண்டு பக்கமும்) சமர்ப்பிக்க வேண்டும்;
(iv) பிரதேச செயலாளர் கையொப்பமிட்ட தமது நிரந்தர பதிவு இருக்கும் தொகுதியின் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடம் சம்பந்தமான சான்றிதழ் (அந்த சான்றிதழ் விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 06 மாதத்திற்குள் பெற்றுக் கொண்டதாக இருத்தல் வேண்டும்;

விண்ணப்பப்பத்திரம் கோரப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பப்பத்திரத்தில் இருக்கும் அனைத்து தகுதிகளும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இந்த ஆட்சேர்ப்பு சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்திராத அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதியான முடிவு தவலம பிரதேச சபையின் தலைவருக்கு உரியதாகும்.

பந்துல விஜேசேகர,
தலைவர்,
தவலம பிரதேச சபை.

தவலம பிரதேச சபை அலுவலகம்,
2019, மே 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தென் மாகாண அரசாங்க சேவையில் தவலம பிரதேச சபையில்**

...................................... பதவி

01. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :...............................................................................
(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :.......................................................................

02. நிரந்தர வதிவிட மாவட்டம் : .......................................................................................

03. (i) பிறந்த திகதி : ஆண்டு : ....................... மாதம் : .................................. திகதி : ..........................
(ii) விண்ணப்பப்பத்திரம் கோரப்படும் இறுதி நாள் 2019.06.14 அன்று வயது :
வருடங்கள் : ..........................மாதங்கள் : .....................................நாட்கள் :..........................

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

05. பால் (ஆணா/பெண்ணா) :...............................................................................

06. விவாகம் ஆனவர்/ஆகாதவர் :- .......................................................................................

07. நீர் இலங்கைப் பிரசையா (பரம்பரையாகவா அல்லது பதிவு மூலமா என்பதை குறிப்பிடுக :
.......................................................................................

08. இனம் : .......................................................................................................

09. கல்வித் தகைமை: .......................................................................................

10. தொழில் மற்றும் வேறு தகைமை விபரம் : ..............................................................

11. நீர் ஏதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? ........................................

12. நீர் தற்போது தவலம பிரதேச சபையில் சேவை செய்பவராயின் :
(i) தற்போது வகிக்கும் பதவி : .................................................................
(ii) அந்தப் பதவி கிடைத்த திகதி : ......................................................................
(iii) அந்த நியமனத் தன்மை (நிரந்தர/தங்காலிக/அமய/பதிலாக/ஒப்பந்த அடிப்படையில்) :
.....................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுத்துள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றவையும் என்பதை நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் பிழையானவை அல்லது உண்மையற்றவை என நான் பதவிக்குத் தெரிவு செய்வதற்கு முன் வெளிப்படுத்தப்பட்டால் நான் தகைமையற்றவன் ஆவேன் என்றும் பதவி கிடைத்த பிறகு அவ்வாறான விடயமொன்று தெரிய வந்தால் எந்தவித இழப்பீடும் இல்லாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி : .............................

12. தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

இந்த விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி ............................................... தற்போது இத் திணைக்களத்தில் / நிறுவனத்தில் பணிபுரிகின்றார். அவர் எவ்விதத்திலும் ஒழுக்காற்று தண்டணைக்கு (அறிவுறுத்தலைத் தவிர) உட்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப் படிவத்தை விதப்புரை செய்து சமர்ப்பிக்கின்றேன்.

....................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்,
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி .............................

05 - 691

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**மஹரகம நகரசபை**

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்)
50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்

நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபை நிர்வாகக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய கையேகப்பதற்கு சபை தீர்மானித்துள்ளது.

02. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

03. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

டிராஜ் லக்றுவன் பியரத்ன,
தலைவர்,
மஹரகம நகரசபை.

| தொ. இல. | திட்ட இலக்கம் திகதி மற்றும் நில அளவை யாளரின் பெயர் | வீதியின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | தி.இ : 179 திரு. டப்ளியூ.பீ.த. சில்வா அவர்களினால் வரையப்பட்டது | தலவத்துகொடை தர்மபால மாவத்தையின் குறுக்கு வீதி (வ.ப.இல. 32/1 இலிருந்து வ.ப. இல. 40/5 வரை) | தலவத்துகொடை கிழக்கு | அடி 281 | அடி 15 அடி 12 | வ.ப.இல. 32/1 வீடு | வ.ப.இல. 40/5 வீடு |

| தொ. இல. | திட்ட இலக்கம் திகதி மற்றும் நில அளவை யாளரின் பெயர் | வீதியின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 02 | தி.இ : 2934<br>திகதி : 2015.08.11<br>திரு. எம்.எம்.எஸ் பர்னாந்து அவர்கள் | மகரகமை நாவின்ன சுச்சரித்த மாவத்தையின் குறுக்கு வீதி | நாவின்ன | மீ. 32 | மீ. 3 | வ.ப.இல. 80 | வ.ப.இல. 80/3 |
| 03 | திரு. எம்.ஜே. சேதுங்க அவர்கள்<br>தி.இ : 985<br>திகதி : 1972.01.20 | ஹேனேகெதர வீதி வ.ப. இல. 60 இல் ஆரம்பமாகும் குறுக்கு வீதி | 532 பீ கொடிகமுவ | மீ. 52 | மீ. 4.5 | வ.ப.இல. 60 | வ.ப.இல. 60D |
| 04 | திரு. எம்.ஜே. சேதுங்க அவர்கள்<br>தி.இ : 985<br>திகதி : 1972.01.20 | ஹேனேகெதர வீதி வ.ப. இல. 66 இல் ஆரம்பமாகும் குறுக்கு வீதி | 532 பீ கொடிகமுவ | மீ. 80 | மீ. 6.10 | வ.ப.இல. 66 | வ.ப. இல. 68/5 |
| 05 | நிலஅளவையாளர் திரு. கே.ஜி.ஜி. பியசேன அவர்கள்<br>தி.இ : 1337<br>திகதி : 2005.06.16 | லியனகொடை எக்கமுத்து மாவத்தையின் கடைசிப் பகுதி | கொட்டாவ கிழக்கு | மீ. 190<br>மீ.90 | மீ. 6.0<br>மீ. 4.5 | எக்கமுத்து மாவத்தையின் ஆரம்பம் | வ.ப.இல. 178/80B |
| 06 | தி.இ : 1337<br>நிலஅளவையாளர் திரு. எஸ். ஏ. விஜேசிங்ஹ அவர்கள்<br>திகதி : 2005.06.16 | மாலபல்ல கலவில வீதியில் ஆரம்பமாகும் வ.ப. இல. 502/17 இல். முடிவடையும் குறுக்கு வீதி | மாலபல்ல கிழக்கு | மீ. 114 —><br>மீ. 35 —><br>மீ. 23 —> | மீ. 4.5<br>மீ. 3.65<br>மீ. 3.0 | கலவில வீதி | வ.ப.இல. 502/17 |
| 07 | திரு. என். அபேசிறி அவர்கள்<br>தி.இ : 9516<br>திகதி : 1995.04.09 | விஜேசேகர மாவத்தை 1 ஆம் குறுக்கு வீதி | மிரிஹான வடக்கு | மீ. 32 —><br>மீ. 27.7 —><br>3.0 —> | மீ. 4.0<br>மீ. 3.0<br>மீ. 3.0 | விஜேசேகர வீதி | வ.ப.இல. 33/3 |
| 08 | தி.இ : 548<br>நிலஅளவையாளர் ஏ.ஆர். சில்வா அவர்கள் | பன்னிப்பிட்டிய, ஹோகந்தர வீதி, வரிப்பண இலக்கம் 156 இலிருந்து 148/5 வீடு வரையான குறுக்கு வீதி | கொட்டாவ மேற்கு | அடி 150 | அடி 15 | வ.ப 156 | வ.ப 148/5 |

05-594

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத் துணைவிதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளஅதிகாரத்தின்படி, 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதிய சா.கூ/2019.01.04/10/109 ஆம் இலக்க தீர்மானத்தின் படி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையால் கீழ்க்குறிப்பிடப்படும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகின்றேன்.*

அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மாணிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மாணிப்பாய்.
2019, ஏப்பிறல் 29.

*சா.கூ/2019.01.04/10/109 ஆம் இலக்க 04.01.2019 ஆந் திகதிய தீர்மானம்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ) சட்டத்தின் 2 ஆவது விதியின்(1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும். 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (நியமத் துணைவிதிகள் ) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வடக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் படி வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2018.05.09 ஆம் திகதிய2070/11ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு, வடக்கு மாகாண சபையால் 2018.09.11 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2018.10.08 ஆந் திகதிய 2092/06 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 7-9 வரையான வடக்கு மாகாண பிரதேசசபைகளுக்கான துணைவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக் கொள்வது என்றும் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க (அத்தியாயம் 261) நியமத் துணைவிதிகள் சட்டத்தின் 3ஆவது பிரிவின் (1)ஆவது உப பிரிவின் பிரகாரம் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையால் தீர்மானிக்கப்படுகின்றது.*

*05-662*